**O.S.102/2021**

Date: 01.09.2023

Pw-1 – **கருப்பையா**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதி தரப்பில்)**

14) வா.சா.ஆ.12 ஆவணம் 10(1) அடங்கல் ஆகும். மேற்படி ஆவணத்தை நான் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து வாங்கினேன். மேற்படி ஆவணம் எந்த வருடத்தில் வாங்கினேன் என்று எனக்கு ஞாபகமில்லை. மேற்படி ஆவணத்தை என்ன வகைக்காக நான் வாங்கினேன் என்றால் விவசாயம் செய்யும் வகையில் மானியம் பெறுவதற்காக வாங்கினேன். மேற்படி வா.சா.ஆ.12 ஆவணத்தை வைத்து நான் அரசாங்கத்திடமிருந்து மானியம் பெற்றுள்ளேன். மானியமாக பூ ஒன்றுக்கு ரூ.3000/- பெற்றுள்ளேன். மேற்படி பணத்தை பெற்றதற்கு என் வங்கி பாஸ்புத்தகத்தை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான்.

15) வா.சா.ஆ.12 ல் சர்வே எண்.488 ல் 0.42.5 ஏர்ஸ் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 0.42.5 ஏர்ஸ் என்பது 1 ஏக்கர் 4 செண்ட் என்றால் சரிதான். சர்வே எண்.488 ல் 1 ஏக்கர் 4 செண்ட் இடம் என் அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். என் அனுபவத்தில் இல்லாத சொத்தைப் பொறுத்துதான் வி.ஏ.ஓ-விடமிருந்து நான் வா.சா.ஆ.12 ஐ பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 அடங்கல் போன்றுதான் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11 ஆகிய அடங்கலையும் வி.ஏ.ஓ-விடம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11 ஆவணங்களையும் நான் அரசு மானியம் பெறுவதற்காக பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களிலும் சர்வே எண்.488 ல் 0.42.5 ஏர்ஸ் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

16) என் அனுபவத்தில் இல்லாத சொத்துக்களைப் பொறுத்து கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால்

Sd/-Tr.P.K., ADM Sd/-**கருப்பையா**

சரியல்ல. நான் கிராம நிர்வாக அலுவலரிடம் தொகை கொடுத்து நான் பெற்ற ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணம் 17.03.2021ல் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 தீர்வை ரசீது பட்டா எண்.864 சம்பந்தப்பட்டதாகும். என்னிடம் பட்டா எண்.864 கிடையாது. அந்த பட்டா யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த பட்டாவை பார்த்தால்தான் அந்த பட்டாவில் என்னென்ன சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணமும் தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

17) பிராது தபசிலில் சொல்லியுள்ள சொத்திற்கான பட்டா எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த சர்வே எண்ணைப் பொறுத்து நான் பரிகாரம் கோருகிறேன் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். முந்தைய வழக்கின் சொத்துக்களைப் பார்த்து வழக்கறிஞருக்கு விபரம் சொல்லி அந்த வழக்கு சொத்தைப் பொறுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/–கருப்பையா

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பித்து சாட்சி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்பு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது.

Sd/-Tr.P.Kumar, 01.09.2023
கூ.மா.உ.நீ.
அம்பாசமுத்திரம்.